# ஆயிரம் நாளைப் பார்க்கிலும்

# *Better is One Day in Your Courts*

Album 22 Song 3

# Song 3 ஆயிரம் நாளைப் பார்க்கிலும்

Psalm 84 – Deep longing for God's presence. "Better is one day in Your courts than a thousand elsewhere." Even the sparrow finds a home near God's altar. Blessed are those who dwell in God's house.

ஆயிரம் நாளைப் பார்க்கிலும்
உமது பிரகாரங்களில் செல்லும் ஒரு நாளே நல்லது
ஆகாமிய கூடாரங்களில் இருப்பதைப்பார்க்கிலும்
தேவனின் ஆலயத்தின் வாசற்படியில் காத்திருப்பேன்

உமது வாசஸ்தலங்கள் எவ்வளவு இன்பம்
உமது ஆலயத்தின் மேல் எவ்வளவு வாஞ்சை
உம் வீட்டில் வாசம்செய்யும் நாங்களோ பாக்கியவான்கள்
உம்மை எப்பொழுதும் துதித்துக்கொண்டிருப்போம்

ஆயிரம் நாளைப் பார்க்கிலும்
உமது பிரகாரங்களில் செல்லும் ஒரு நாளே நல்லது
ஆகாமிய கூடாரங்களில் இருப்பதைப்பார்க்கிலும்
தேவனின் ஆலயத்தின் வாசற்படியில் காத்திருப்பேன்

அடைக்கலான் குருவிக்கு வீட்டையும்
தகைவிலான் குருவிக்கு கூட்டையும்
உம்முடைய பீடங்களண்டையில் கட்ட இடம் தந்தீர்
உம் வீட்டில் வாசம் செய்யும் எல்லாரும் பாக்கியவான்கள்

ஆயிரம் நாளைப் பார்க்கிலும்
உமது பிரகாரங்களில் செல்லும் ஒரு நாளே நல்லது
ஆகாமிய கூடாரங்களில் இருப்பதைப்பார்க்கிலும்
தேவனின் ஆலயத்தின் வாசற்படியில் காத்திருப்பேன்

உம்மிலே பெலன் கொள்ளுகிற மனுஷன் பாக்கியவான்
உள்ளத்தில் செவ்வையான வழி கொண்டவன் பாக்கியவான்
சேனைகளின் கர்த்தாவே என் விண்ணப்பத்தைக் கேட்டருளும்
யாக்கோபின் தேவனே. எனக்கு செவிகொடும்.

ஆயிரம் நாளைப் பார்க்கிலும்
உமது பிரகாரங்களில் செல்லும் ஒரு நாளே நல்லது
ஆகாமிய கூடாரங்களில் இருப்பதைப்பார்க்கிலும்
தேவனின் ஆலயத்தின் வாசற்படியில் காத்திருப்பேன்

எங்கள் கேடகமாகிய தேவனே எங்களைப் பாரும்
நீர் அபிஷேகம் பண்ணினவரின் முகத்தை இன்று பாரும்
எங்களுக்கு கிருபையையும் மகிமையையும் அருளுமே
உத்தமமாய் நடக்கிறவர்க்கு நண்மைகளை வழங்கிடும்

ஆயிரம் நாளைப் பார்க்கிலும்
உமது பிரகாரங்களில் செல்லும் ஒரு நாளே நல்லது
ஆகாமிய கூடாரங்களில் இருப்பதைப்பார்க்கிலும்
தேவனின் ஆலயத்தின் வாசற்படியில் காத்திருப்பேன்

KJC-DNN



